**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.6/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னராஜி | மதம் | : இந்து |
| த/பெ | : கன்னியப்பன் | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : செருக்கனூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**19.09.2025**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் என் வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் கன்னியப்பனுக்கு எத்தனையாவது மகன் என்றால் 2வது மகன் ஆவேன். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் என்னுடன் சேர்த்து மொத்தம் 6 பேர். 1. குட்டிவேல், 2. நான், 3. இல்லாமல்லி, 4. ஆறுமுகம், 5. பூஷணம், 6. இளையமதி ஆவார்கள். மேற்படி அனைவரும் திருமணமாகி தனித்தனியாக வசிக்கிறோம் என்றாலும் கூட்டு குடும்பமாக இல்லை என்றாலும் சரிதான். என் அப்பா அம்மா யாருடன் உள்ளார்கள் என்றால் என்னுடன்தான் உள்ளார்கள். நான் என் மனைவி, என் அப்பா, என் அம்மா அனைவரும் ஒன்றாக ஒரே வீட்டில் உள்ளோம் என்றால் சரிதான். எங்கள் நால்வருக்கும் ஒரே முகவரி என்றால் சரிதான்.

2. என்னுடைய முகவரியில்தான் ஆதார் அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்ட அரசு அடையாள அட்டைகள் நான்கு பேருக்குமே உள்ளது என்றால் ஆமாம். எனது ஆதார் அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது ஆதார் அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆதார் அட்டையை இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல. நான் ஆதார் அட்டையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது ஆதார் அட்டை, என் அப்பாவின் ஆதார் அட்டை ஒரே முகவரி என்றால் ஆமாம். ஆனால் தனித்தனி அட்டைகள் ஆகும். அடுத்த வாய்தாவில் நான் என்னுடைய மற்றும் என் அப்பாவின் ஆதார் அட்டையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)